முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் திருநீலகண்ட யாழ்பாண நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

22.12.2018, சனிக்கிழமை

**1.** **கலியுகத்தின் பிரம்ம ஞானியே**
**கந்தவேலன் சக்தியான தவசியே**
**அழியாமையை உலகோர் அடைய**
**அவதாரமாக வந்த யோகியே**

2. யோகியே ஆறுமுக அரங்கனே
உலகினில் உன் பெருமை கூறி
வகைபட **விளம்பி சிலை திங்கள்**
**வளமுற நாததிகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 7ம் நாள் 22.12.2018, சனிக்கிழமை)**

**3.** வாரமதில் ஒளி சூட்சும நூலை
வழங்குவேன் **திருநீலகண்ட யாழ்பாண நாயனாரும்**
சோரமிலா உலகம் அமைய உரைப்பேன்
சுத்தநெறி போற்றப்பட வேண்டும்

4. வேண்டுமப்பா கலிகால மக்களுக்கு
வினை எதனால் வருகுமெனும் பயம்
உண்டான பிறர் வருந்த செய்யும்
ஊழல் சொல் செயலனைத்தும்

5. அனைத்தாலும் வினை கூடுமப்பா
ஆணவம் சுயநலம்பட நடந்து
மனைபூமி பிறர் ஆஸ்தி அபகரிப்பு
மாற்றான் மனை நோக்கல் மாபாதகம்

6. பாதகமான செயலை செய்து
பழியை பிறர் மேலிட்டு நசுக்குவது
ஆதரவு என்று கூறி அடிமைப்படுத்துவது
அவசியம் என தன்னலம்பட நடந்து

7. நடந்துமே பொதுநலமிலா இருப்பது
நம்பிக்கை துரோகம் உயிர்பலி
இடரென புலால் ஜீவவதை செய்து
ஏவல் ஓமல் என இடர்பல தருவது

8. தருகின்ற மக்கள் சேவை நிதியை
தடையாக்கி தனதாக்கி கொள்வதும்
பெருமைமிகு பதவிகளிலிருந்து
பொருள் பெற்று கடமை ஆற்றுவதும்

9. ஆற்றாமை பசிபிணி மாந்தரை
அவமதிப்பு செய்து அலட்சியம் செய்வதும்
மாற்றமிலா புறம் கூறி மற்றவர்
மனம் நோகச் செய்வதும்

10. செயல்வழி சூது மது மாது என
செய்கை வழி தருமமிலா நடப்பதும்
தயவிலா செயல்கள் அனைத்தின்வழி
தாக்கும் சேரும் கருமவினை தானப்பா

11. அப்பனே அனைத்து வினை அகற்றி
அருள்புரியும் அரங்கஞானி பாதம்
காப்பென பற்றி விழும் மக்களுக்கு வினை சேரா
கடைத்தேற்றமும் உறுதி உறுதி என்பேன் ஒளி சூட்சும நூல் முற்றே.

—சுபம்—

முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலகண்டயாழ்பாண நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

மாமாயை சூழ்ந்திட்ட கலியுகத்தினில் வந்துதித்து கலியுக மாயையில் இருந்து உலகோரை காக்க வந்திட்ட பிரம்மஞானியே முருகப்பெருமானின் சக்தி வடிவமான மகா தவசியே அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வினை உலக மக்களெல்லாம் அடைந்திடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட மகா யோகியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 7ம் நாள் 22.12.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே குற்றமில்லாத ஞானம் அமைந்திட வேண்டி திருநீலகண்டயாழ்பாண நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் திருநீலகண்டயாழ்பாண நாயனார்.

உலகினில் குற்றமற்ற ஞானஉலகம் அமைந்திடவே உரைப்பேன் யானும், உலக மக்களெல்லாம் அரங்கன் கூறும் கொல்லாமை நெறியுடைய சுத்தநெறியை போற்றி பின்பற்றி வருவதுடன் புலால் மறுத்து சுத்த சைவ உணவினை மேற்கொள்ள வேண்டும்.

கலிகால மக்களுக்கு வினையின் தன்மையும், பாவபுண்ணியங்கள் பற்றிய தெளிவும், வினைகள் எதனால் வருகிறது என்பதின் பயமும் வேண்டும். பிறர் வருந்தும்படியாக பேசுகின்ற சொற்களும், ஊழலும், செயல்களும் இவை அனைத்தினாலும் வினை பெருகிடும், பிறர் வருந்தும்படி எது செய்யப்பட்டாலும் அது பாவவினையை சேர்க்கும். ஆணவத்தினால் பொதுநலம் மறந்து சுயநலமாக செயல்பட்டு நிலங்களையும் பொதுசொத்துகளையும், பிறரது ஆஸ்திகளையும் அபகரித்தால் பெரும் பாவம் சூழுமப்பா. பிறருடைய மனைவியை தவறான நோக்கத்துடன் பார்த்தாலே மாபாதகமப்பா, வினை சூழும்படியாக பாதகமான செயல்களை தாம் செய்துவிட்டு பழியை பிறர்மேலிட்டு அவர்கள் செய்தது குற்றமென சொல்லி பிறரை நசுக்குவது, ஆதரவு தருகிறேன் என்ற போர்வையில் பிறரை அடிமைப்படுத்துவது, தனக்கு தேவை என்பதினால் பொதுநலம் மறந்த தனது தேவைக்காக தன்னலமாக நடந்து கொள்வது, தம்மை நம்பினோர்க்கு நம்பிக்கை துரோகம் செய்வது, உயிர்ப்பலி இடுதல், புலால் உண்பது, ஜீவவதை செய்தல், பிறர் கெட வேண்டும் என்றோ இன்னும் பல காரணங்களுக்காகவோ பிறர் துன்பப்படும்படியாக மாந்திரீக சக்திகளை ஏவிவிட்டு ஏவல், ஓமல் என இடர்களை தருவது, மக்கள் நலனிற்காக தரப்படுகின்ற சேவை நிதிகளை மக்களிடம் செல்லவிடாமல் தடுத்து தனது பொருளாக்கி கொண்டு பொருளை

சேர்த்து வைப்பது, பெருமைமிக்க பதவிகளில் கௌரவமாய் இருந்தபோதும் தமது கடமைகளை செய்வதற்கு பொருள் பெறுவது, பசியால் வருந்தி துன்பப்படுகின்றவர்களை, ஆற்றாமையில் உழலும் பசி உற்றோரை அவமதிப்பு செய்வது, அலட்சியம் செய்வதும், புறம்பேசி மற்றவர் மனதினை நோகச்செய்வதும் மது, மாது, சூது எனும் பாதகச் செயல்களை செய்வதும், தர்மம் இல்லாத வகையில் நடந்து கொள்வதும் மட்டுமின்றி தயவு இல்லாத எந்தவொரு செயலும் வினையை உண்டாக்கும், பாவத்தை சேர்க்கும் செயல்கள்தானப்பா. இச்செயல்களினால் பாவம் மனிதனை தாக்கத்தான் செய்யும், கருமவினை உண்டாகத்தான் செய்யுமப்பா.

அப்பனே எல்லா வினைகளையும் போக்கி காத்து அருள்புரியும் வல்லமைமிக்க அவதார மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஞானமளிக்கும் திருவடிகளே கதியென அரங்கனிடத்து பயபக்தி பணிவுடன் உருக்கமாய் நடந்து மன்றாடி கேட்டு எம்மை காத்தருள்வாய் அரங்கமகானே உம்மைவிட்டால் எமக்கு வேறு கதியில்லை. என்போன்ற பாவிகளை உம்மாலன்றி வேறு யாராலும் காக்க முடியாதப்பா. காப்பாய் எம் தெய்வமே கருணை கொண்டு எம்மை ஏற்றுக் கொள்ளுங்கள். உமது திருவடிக்கே எமது உள்ளம், உடல், பொருள், ஆவி அனைத்தும் அர்ப்பணித்தேன் என முழுச் சரணாகதியினை அரங்கன் திருவடிகளிலே அடைந்து திருவடி பற்றி வாழும் மக்களுக்கு மட்டுமே வினை சேராது, ஜென்மத்தைக் கடைத்தேற்றும் வாய்ப்பும் கிடைக்கும். வேறு மார்க்கம் இல்லை இல்லை. அரங்கனால் மட்டுமே கலியுக மக்களின் வினைபோக்கி காக்க முடியும். அரங்கன் திருவடியே வினை நீக்கும். உபாயம் வேறு வழியில்லை. இது உறுதி உறுதி என உறுதியிட்டு கூறுகிறேன் திருநீலகண்ட யாழ்பாண நாயனார் யானுமே என உறுதிபட உலகிற்கு உரைக்கின்றார் மகான் திருநீலகண்ட யாழ்பாண நாயனார்.

–சுபம்–